තොරතුරු තාක්ෂණ කළමනාකරණ දෙපාර්තමේන්තුව
தகவல் தொழிநுட்ப முகாமைத்துவத் திணைக்களம்
DEPARTMENT OF INFORMATION TECHNOLOGY MANAGEMENT

මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහ ලේකම් කාර්යාලය, කොළඹ 01,
ශ්‍රී ලංකාව.
செயலகம் கொழும்பு 01,
இலங்கை
The Secretariat, Colombo 01,
Sri Lanka.

දුරකථනය
தொலைபேசி
Telephone
+94 11 2484582

ෆැක්ස්
தொலைநகல்
Fax
+94 11 2421219

වෙබ් අඩවිය
வெப் சைட்
Website
www.treasury.gov.lk

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல்
E-mail
dgitm@itmd.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. ITM/01/01/02/002

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2024.08.

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர் யாவருக்கும்.

பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவி வெற்றிடம்

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதியை 2024.08.14 ஆம் திகதி வரை நீடித்தல்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்காக 2024.07.22 ஆம் திகதியன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் இணையதளத்திலும் (www.treasury.gov.lk) 2024.07.25 ஆம் திகதியன்று பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையதளத்திலும் (www.pubad.gov.lk) வெளியிடப்பட்டது. அந்த விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைவாக விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.08.07 ஆம் திகதியுடன் முடிவடைய உள்ளது. இருப்பினும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2024.08.14 ஆம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

02. அதற்கு அமைவாக, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தங்களது நிறுவனத்தின் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பார்களேயானின், தொடர்புடைய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் dgitm@itmd.treasury.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பணிப்பாளர் நாயகம், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம், செயலகம், கொழும்பு 01 எனும் முகவரிக்கு உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அறிவிக்கும் படி மிகவும் தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

03. இது சம்பந்தமாக இதற்கு முன்னர் தங்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்கு மிகவும் நன்றியுடையவன் ஆவேன்.

ஒப்பம்/ ரவீந்திர பத்மபிரிய
பணிப்பாளர் நாயகம்